



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்களின் தலைமையில் நேற்று (08.10.2025) மாவட்ட வாரியாக மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுலா திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சென்னை, சுற்றுலா வளாகத்தில் நடைபெற்றது. இதில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி ச. கவிதா, கண்காணிப்பு பொறியாளர், திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### அரசுப் பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 119 பணியிடங்கள்

## மாற்றுத்திறனாளிகளுக்கான பணியிடங்களாக மாற்றி அரசாணை வெளியிட்ட முதல்வருக்கு நன்றி!

### மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் பொதுச்செயலாளர் ரகமதுல்லா அறிக்கை!

தஞ்சாவூர் அக்.9-

அரசு வேலை வாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான பங்களிப்பை பெரிதும் உயர்த்தும் வகையிலும், அவர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத் திற்கும் 119 அரசு பணியிடங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்றவகையாக அடையாளம் காணப்பட்டுள்ளதை வரவேற்று மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் அ.ரகமதுல்லா அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை; ஏற்கனவே மாற்றுத்திறனாளிகளுக்கு கண்டறியப்பட்ட தகுதி உள்ள பணியிடங்கள் அரசாணை எண் 20 வெளியிடப்பட்டு நடைமுறையில் இருந்த வருகிறது. அதனுடைய தொடர்ச்சியாக தற்போது பல்வேறு அரசு துறைகளில் 119 பணியிடங்கள் மாற்றுத்திறனாளிகள் பணி புரிவதற்கு தகுதி வாய்ந்த பணியிடமாக மாற்றி அரசாணை வெளியிட்ட தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாற்றுத்திறனாளி கள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

கழக அரசு எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்பொழுதெல்லாம் மாற்றுத்திறனாளி களின் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற காலத்தில் மாற்றுத்திறனாளிகள் என்ற தனித்துறையை உருவாக்கி தன்னுடைய நேரடி பார்வையில் வைத்திருந்தார். அது போல இன்றைக்கு மு.க. ஸ்டாலின் அவர்களும், மாற்றுத்திறனாளிகள் துறையை தன்னுடைய நேரடி பார்வையில் வைத்து மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கு அதிகப்படியான நிதிகளை ஒதுக்கி நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

மாற்றுத்திறனாளிகள் சமூகப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவதற்கு தற்போது அரசு பணிகளில் மாற்றுத்திறனாளி களுக்கு ஏற்ற வகையில் 119 பணியிடங்கள் அடையாளம் காணப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசு வேலை வாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பை நான்கு சதவீதம் உறுதி செய்யும் விதமாக அவர்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை உயர்த்து வகையில் குறிப்பாக கனிம வளம், சட்டம், கூட்டுறவு, ஊராட்சி, நகராட்சி, போக்குவரத்து, நெடுஞ்சாலை துறை, சுற்றுலா, வேளாண் தகவல் தொழில் நுட்பம் ,உள்துறை நிதி, நிர்வாகம், சுகாதாரம், இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு வீட்டு வசதி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 119 பணியிடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இனிவரும் காலங்களில் தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகள் இப்ப பணியிடங்களில் விண்ணப்பித்து பணி வாய்ப்பை பெறுவதற்கான ஏற்பாட்டை செய்துள்ளதற்கும், தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களுக்கும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களுக்கு ஆசிரியர் தகுதி தேர்வில் மாற்றுத்திறனாளிகளுக்கு 60 சதவீத மதிப்பெண்ணை தகுதி மதிப்பெண்ணாக நிர்ணயம் செய்ய வேண்டும். பல்வேறு துறைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான பின்னடைவு காலிப் பணியிடங்களை சிறப்பு தேர்வு மூலம் அனைத்து பணியிடங்களையும் நிரப்ப வேண்டும் என உரிமையோடு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் பொதுச்செயலாளர் ரகமதுல்லா அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### க.கோவிந்தராஜ் தலைமை! மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி - சி.பி.திருமலை முன்னிலை!

## அண்ணாநகர் 101 வது வார்டில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

### நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எம்.கே.மோகன் - ச.பரமசிவம் - கார்த்திக் மோகன் பங்கேற்பு!

சென்னை, அக். 09

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் வடக்குப் பகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 8 வது மண்டலம், 101 வது வார்டில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் முகாம் இன்று (09.10.2025 வியாழக்கிழமை) காலை 8.30 மணியளவில், ஜெ.ஜெ. உள் விளையாட்டு அரங்கம், விளையாட்டு திடல் தெரு, கீழ்ப்பாக்கம் கார்டன் காலனி, கீழ்ப்பாக்கத்தில் நடைபெறுகிறது.

101 வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமை வகிக்கிறார்.

101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி. பி.திருமலை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்முகாமில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம். சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், அண்ணாநகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைக்கின்றனர்.

எனவே வட்டத்திற்குட்பட்ட வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பி.எல்.ஏ.2, பி.எல்.சி, கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு முகாமினை சிறப்பிக்குமாறு வட்டக் கழகச் செயலாளர்கள் க.கோவிந்தராஜ், சி.பி. திருமலை ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### காஞ்சிபுரம் மாநகரம் கழக மூத்த முன்னோடிகள்

## சு.திருவேங்கடம் - சி.கே.வஜ்ஜிரவேலு நினைவு நாள்!

### சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. - கழகத்தினர் நினைவஞ்சலி!

காஞ்சிபுரம், அக். 8 -

காஞ்சிபுரம் மாநகரம் கழக மூத்த முன்னோடிகள் சு. திருவேங்கிடம் , சி.கே. வஜ்ஜிர வேலு ஆகியோரின் நினைவு நாளை முன்னிட்டு, காஞ்சிபுரம் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் உள்ள அன்னாரது திருவுருவப் படத்திற்கு, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் , சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. கழக நிர்வாகிகளுடன் இணைந்து மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதுபோது மாநரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், பகுதி கழக செயலாளர்கள் கே. திலகர், அ.தசரதன், சு. வெங்கடேசன், மாநகர நிர்வாகிகள் ஏ.எஸ்.முத்து செல்வம், சுதா என்கிற சுப்புராயன், கழக நிர்வாகிகள் நாத்திகம் நாகராஜன், மலர்மன்னன், அ. மோகனவேலு, வ.அய்யாவு, ஜி.எல்லப்பன், லட்சுமணன், எம்.எஸ்.பி. பாண்டியன், வட்டச் செயலாளர்கள் வி. அன்பழகன், ஸ்ரீபால், தெய்வசிகாமணி, சார்பு அணிகளின் நிர்வாகிகள் பாரதி, மாதவன், குணா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் பென்னநல்லூர் கிராமத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின் திட்ட’ முகாம் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து, உடனுக்குடன் வீட்டு வரி இருப்புச் சான்று ஜாதி சான்றுகளை பயனாளிகளுக்கு வழங்கினார். உடன் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன், ஒன்றியக்குழுத் தலைவர் ஹேமலதா ஞானசேகரன், ஊராட்சி மன்ற தலைவர் மங்கையர்கரசி பாரிவள்ளல், சசிகுமார், அல்லி பாபு, விஸ்வநாதன், ஜேம்ஸ், அருள்ராஜ், சுகுணா சுந்தர்ராஜன், கெங்கன், சுப்பராயன், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

### இதுவரை ரூ.6 கோடியே 33 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 33 லட்சத்து 90 ஆயிரம்.** இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 08-10-2025** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பி.ராமசாமி, எ.பாதர்பேட்டை அஞ்சல், துறையூர் தாலுக்கா, திருச்சி | 25,000/–– |
| 2. | வி.பிரபு, லட்சுமிபுரம், கத்தாயம்பட்டு அஞ்சல், வேலூர் – 632 312 | 25,000/– |
| 3. | எஸ்.வேதரெத்தினம், மடப்புரம், தீவம்பாள்புரம் அஞ்சல், திருவாரூர் மாவட்டம் | 25,000/– |
| 4. | பி. பெருமாள், மேலப்பொன்னகரம் 5வது தெரு, கரிமேடு, மதுரை | 25,000/– |
| 5. | எஸ்.எம்.பரமசிவம், காந்தி நகர், ஐக்கமநாயக்கன்பட்டி, போடி, தேனி மாவட்டம் | 25,000/– |
| 6. | வி.சுப்பிரமணி, 10வது வார்டு, ஆதிதிராவிடர் குடியிருப்பு, பாலசமுத்திரம் | 25,000/– |
| 7. | பி.ஆண்டி, வட்டான்வலசை, செம்பிடையார்குளம், மண்டபம், இராமநாதபுரம் | 25,000/– |
| 8. | அ.செல்வம், நேருஜி தெரு, சாத்தூர், விருதுநகர் மாவட்டம். | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

## உத்திரமேரூர் தொகுதி குன்னவாக்கம் - காஞ்சிபுரம் புதிய பேருந்து சேவை!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

காஞ்சிபுரம், அக். 9 -

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், குன்னவாக்கம் ஊராட்சி முதல் காஞ்சிபுரம் வரையிலான பேருந்து சேவையை நேற்று (8.10.2025) காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டப்பேரவை உறுப்பினருமான க.சுந்தர் பேருந்து துவக்கி வைத்தார்.

இதில் சாலவாக்கம் ஒன்றிய கழக செயலாளர் தி.குமார், போக்குவரத்து துறை சார்ந்த அதிகாரிகள், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சிவராமன், ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி. நதியாகோபி, ஒன்றிய பொருளாளர் பாலமுருகன், பாலேஸ்வரம் ஊராட்சி மன்ற தலைவர் சுந்தரமூர்த்தி, ரெட்டமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.சுஜாதா ஜெயராமன், அரசு ஒப்பந்ததாரர் யோகநாதன், கலை இலக்கிய மாவட்ட துணை அமைப்பாளர் சு.முரளிதரன், மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி. இரத்தினமாலா, கிளைக் கழக நிர்வாகிகள் இளங்கோவன், கெங்கபிள்ளை, பாபு, வெங்கடேசன், பாலசுப்பிரமணி, மாணவரணி அமைப்பாளர் செ. விஷ்ணு, இளைஞரணி துணை அமைப்பாளர் கோகுல கண்ணன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் அரசு துறையை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### டி.ஜெகதீஷ் பாபு தலைமை!

### எஸ்.முரளி - ராஜா அன்பழகன் பங்கேற்பு!

சென்னை, ஆக. 9-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி இளைஞரணி சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று (09-10-2025 ) மாலை 7:00 மணிக்கு மயிலை பகுதி கழக அலுவலகத்தில் இளைஞர் அணி அமைப்பாளர் டி. ஜெகதீஷ் பாபு தலைமையில், மாவட்ட துணை அமைப்பாளர் த.விக்னேஸ்வரன், தினேஷ் மாணிக்கம் முன்னிலையில் நடைபெறுகிறது.

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மைலாப்பூர் சட்ட மன்ற உறுப்பினர் மயிலை த.வேலு ஆலோசனைப்படி நடைபெறும் இக்கூட்டத்தில் மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ். முரளி கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றார். சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

கழக அக்க பணிகள் குறித்து ஆலோசிக்கப்படும் இக்கூட்டத்தில் பகுதி துணை அமைப்பாளர்கள் தா. தீபன், வே. ஹேமந்த் குமார், பா.முருகேசன், மு.நிரஞ்சன் சாய் , ரா.சுந்தர், பா. அபினேஷ் பாபு மற்றும் வட்ட அமைப்பாளர்கள் ரா. விஜய், சி.ராஜா, அ. சூர்யா, ரா.சாமுவேல், ம.பிரசாந்த், சு.சுரேன் குமார், மு. விக்னேஷ் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் டி.ஜெகதீஷ் பாபு கேட்டுக் கொண்டுள்ளார்.

## சென்னையில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்

### இன்று 11 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை, அக்.9-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் இன்று (09.10.2025) திருவொற்றியூர் மண்டலம் (மண்டலம்-1), வார்டு-14ல் திருவொற்றியூர் நெடுஞ்சாலை, சிஎஸ்ஐ சர்ச் அருகில் உள்ள விளையாட்டு மைதானம், மாதவரம் மண்டலம் (மண்டலம்-3), வார்டு-30ல் ரெட்டேரி, ஜவஹர்லால் நேரு 200 அடி சாலையில் உள்ள உமாயா மஹால், தண்டையார்பேட்டை மண்டலம் (மண்டலம்-4), வார்டு-37ல் வியாசர்பாடி, எம்.கே.பி நகர் 3வது பிரதான சாலையில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளி, அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்-7), வார்டு-86ல் அயப்பாக்கம், ஐ.சி.எப். காலனியில் உள்ள ரீ வாரு பார்த்த சாரதி பேலஸ், அண்ணாநகர் மண்டலம் (மண்டலம்-8), வார்டு-101ல் கீழ்பாக்கம், விளையாட்டுத் திடல் தெருவில் உள்ள ஜெ.ஜெ. உள்விளையாட்டு அரங்கம், தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்-9),

வார்டு-123ல் கே.பி.தாசன் தெருவில் உள்ள எஸ்.ஐ.ஈ.டி. திருமண மண்டபம், கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம்-10) வார்டு-131ல் டாக்டர் அம்பேத்கர் சாலையில் உள்ள சமுதாயக் கூடம், வளசரவாக்கம் மண்டலம் (மண்டலம்-11), வார்டு-152ல் ஆற்காடு சாலையில் உள்ள மண்டல அலுவலகம், ஆலந்தூர் மண்டலம் (மண்டலம்-12), வார்டு-167ல் நங்கநல்லூர், 100 அடி சாலையில் உள்ள ஸ்கேட்டிங் மையம், அடையாறு மண்டலம் (மண்டலம்-13), வார்டு-179ல் பெசன்ட் நகர், மீன் சந்தை அருகில் உள்ள ஸ்கேட்டிங் மைதானம், பெருங்குடி மண்டலம் (மண்டலம்-14), வார்டு-188ல் மடிப்பாக்கம், பாலையா கார்டன், பஜனை கோயில் தெருவில் உள்ள ருக்மணி மஹால் ஆகிய 11 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



ஆனைமலை பேரூராட்சியில் (7.10.2025) அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தூய்மை பணியாளர்களுக்கு தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் டாக்டர் திப்பம்பட்டி ஆறுச்சாமி நலவாரிய அடையாள அட்டைகளை வழங்கினார். உடன் பேரூராட்சி தலைவர் திருமதி. கலைச்செல்வி சந்தலிங்ககுமார், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய துணை தலைவர் திருமதி. செ.கனிமொழி. பேரூராட்சி துணை தலைவர் ஜாபர்அலி, பேரூராட்சி செயல் அலுவலர் அப்துல்லா ஆகியோர் உள்ளனர்.